
# இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடிக்கு பதிலளிப்பதற்கான பொதுவான குறைந்தபட்ச செயற்திட்டம்

நாம் முன்னொருபோதும் சந்தித்திராத நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். நாடு எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியை எதிர்கொண்டுள்ள காலகட்டமான 2001-02இலிருந்து எவ்வித பயனுள்ள ஒப்பீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இற்றைக்கு 90 ஆண்டுகளுக்கு முன்னர் நேர்ந்த இலங்கையின் பெரும் பொருளாதார வீழ்ச்சியின் ஒரு பகுதியாக, தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஒருசில வருடங்களில் 80இலிருந்து திடீரென 33ஆக சரிந்தது. இதனை மாத்திரமே ஒரு எடுகோளாகக் கொள்ள முடியும். இல்லாத வளங்களை ஏலம் விடுவதை அடிப்படையாகக் கொண்ட வழக்கமான அரசியல் கலாசாரம், இந்த நெருக்கடிக்கு எவ்வித தீர்வையும் பெற்றுக்கொடுக்கப் போவதில்லை. எழு தசாப்தங்களுக்கு மேலாக பாதிப்பை ஏற்படுத்தும் இப்பிரச்சினைகள் தொடர்பாக நேர்மையான பகுப்பாய்வினை முன்னெடுப்பது அவசியம். அத்தோடு, இப்பிரச்சினைகளுக்கு அடிப்படையான காரணங்களை துணிச்சலாகவும் கூட்டாகவும் முன்வைக்க வேண்டும்.

எமது சமூகம் மற்றும் பொருளாதாரத்தை சூழ்ந்துள்ள சகல பிரச்சினைகளுக்கும் முழுமையான அல்லது சரியான தீர்வுகளை வழங்குவது இந்த கலந்துரையாடல் ஆவணத்தின் நோக்கமல்ல. கடந்த காலத்தில் நிகழ்ந்ததைப் போன்று மீண்டும் மீண்டும் நிகழ்வதைத் தடுக்கும் வகையில், நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதற்கான வழியை தெளிவுபடுத்தும் குறிப்பிட்டளவு குறிக்கோள்களை இது கொண்டுள்ளது. பல நிபுணர்களின் கருத்துக்களை துணையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த ஆவணத்தை மேலும் முன்னேற்றலாம் என நம்புகின்றோம். ஒரு நியாயமான கால வரையறைக்குள் உடன்பாட்டை எட்டுவதற்காக பொருளாதார நடவடிக்கைகளை செயற்படுத்த ஐந்து முன்நிபந்தனைகள், ஏழு உடனடி நடவடிக்கைகள் மற்றும் நான்கு நடவடிக்கைகளை நாம் முன்வைக்கின்றோம். முன்மொழியப்பட்ட இரண்டு வருட கால வரையறைக்குள் இவற்றின் பலனை பெறுவது சாத்தியமில்லை என்றாலும், இவற்றை இப்போதே ஆரம்பிப்பது அவசியம்.

## மக்கள் மீது தாங்கமுடியாத சுமை


அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மட்டுமன்றி, விலையேற்றம் காரணமாக மக்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதம், பணவீக்க வீதமானது 12.1இலிருந்து 14.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22.1 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப்பொருட்களின் பணவீக்கம், இவ்வருட ஜனவரியில் 25 சதவீதமாக அதிகரித்துள்ளது.




**உரு 1: 2021ஆம் ஆண்டு முதல் காணப்படும் பணவீக்க நிலைகள்**

அதிக விலைகொடுத்து பொருட்களை கொள்வனவு செய்யவேண்டியுள்ளதால், உணவை தயாரிப்பது ஒரு போராட்டமாக மாறியுள்ளது. சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. அதன் விலையும் இரட்டிப்பாகிவிட்டது. மாற்று விடயங்களும் (பொருட்கள்/சேவைகள்) இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. மின்சார விநியோகத்தை நம்பியிருக்கும் நுண் நிறுவனங்கள் உள்ளிட்ட சகல வியாபார நடவடிக்கைகளும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளன.

வருமானத்தை பெற்றுக்கொடுக்காத திட்டங்களுக்காக 2007ஆம் ஆண்டுமுதல் பெற்றுக்கொள்ளப்பட்ட வணிகக் கடன்களே, தற்போதைய கடன் முகாமைத்துவத்தில் காணப்படும் நெருக்கடிகளுக்கான உடனடி காரணங்களாகும். 2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தவறான வரிச் சலுகைகள் காரணமாக பிரச்சினைகள் மேலும் தீவிரமடைந்தன. இரட்டைப் பற்றாக்குறையால் (நிதி மற்றும் நடப்புக் கணக்கு) பாதிக்கப்பட்ட ஒரு அடிப்படையற்ற பொருளாதாரமே இவை அனைத்திற்கும் அடிப்படை காரணியாகும். நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து எந்தவொரு அரசாங்கமும் இதுபற்றி பேசவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக அரச வருவாயில் தன்னிச்சைக் குறைப்பு செய்துகொள்ளப்பட்டதால் திரட்டப்பட்ட கடன் சுமையை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டது




**உரு 2: இலங்கையின் கடன் அடக்கக்கூறுகள், 2010-2020 (மூலம்: இலங்கை மத்திய வங்கி)**

தவறான செயற்பாடுகள் காரணமாக பிரச்சினைகளை அதிகமாக்கும் ஒரு மோசமான அரசாங்கத்தையே தற்போது மக்கள் பார்க்கின்றனர். அதற்கான உதாரணங்கள் பலவுள்ளன. அந்நியச் செலாவணியைப் பாதுகாக்கவும், மானியச் சுமையிலிருந்து விடுபடுவதும் ஒரு பங்கினை வகித்தபோதும், 100 வீத இயற்கை விவசாயத்தைக் கொண்ட உலகின் முதல் நாடாக இலங்கையை மாற்றும் வகையில் உரம், களைக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் இறக்குமதி செய்யப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் இரவோடு இரவாக தடை விதித்தது. இதன் விளைவாக இறுதியில் உணவு இறக்குமதி செலவுகள் அதிகரித்தன, விவசாயிகளுக்கு பாரிய இழப்பீடு வழங்கவேண்டிய நிலை ஏற்பட்டது, பயன்படுத்த முடியாத உர இறக்குமதிக்காக 6.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தவேண்டி ஏற்பட்டது. அரசாங்கம் செயற்கையான நாணய மாற்று விகிதத்தை பராமரிக்க முற்பட்டதன் விளைவாக, வெளிநாடுகளில் இருந்து தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

இனி வரப்போகும் நெருக்கடியைப் பற்றி நாம் பேசவில்லை. நெருக்கடியின் ஆழத்திற்கு நாம் செல்லாவிட்டாலும்கூட அதன் மத்தியில்தான் இருக்கின்றோம். 2022 வரவு-செலவுத் திட்டம் இரட்டைப் பற்றாக்குறைகளை நிவர்த்திக்கும் எவ்வித வழிவகைகளையும் வழங்கவில்லை. அதே சந்தர்ப்பத்தில், மோசமான பற்றாக்குறை ஏற்படவும் கறுப்புச் சந்தைகள் தோன்றவும் வழிவகுத்தது. புதிய வருவாய் திட்டங்களில் பெரும்பாலானவை ஒரு முறை மட்டுமே பயன்தருவதாக அமைந்திருந்தது. 2023ஆம் ஆண்டில் நாட்டிற்கு எங்கிருந்து வருமானம் கிடைக்கும்? செலவு குறைப்பு விடயங்களில் பெரும்பாலானவை அழகுசாதனப் பொருட்களாகும். 2022ஆம் ஆண்டு ஜனவரியில் முன்மொழியப்பட்ட மேலதிக செலவீனங்கள், புதிய வருமான முன்மொழிவுகள் இன்றி குழப்பத்தை அதிகரித்துள்ளன. அதிக பாதிப்பை எதிர்கொண்டுள்ள முறைசாரா துறையில் உள்ளவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இந்த வருடம் மாத்திரம் மோசமான வருடமாக அமைந்துவிடாது. இந்நிலை மேலும் தொடரும். வருடாந்த சராசரி கடன்தொகையான 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பிச் செலுத்துவதும், பொருளாதாரத்தின் இயல்பான செயற்பாட்டிற்கு அவசியமான இறக்குமதியின் அளவைப் பராமரிப்பதும் சாத்தியமற்ற விடயம் என்பதை சாதாரண எண்கணிதம் காட்டிவிடும். முன்கூட்டிய தயார்படுத்தல்கள் இல்லாமல் மேற்கொள்ளும் விடயங்கள், மக்களின் வாழ்க்கைத்தரத்தை மோசமாக்குவது மட்டுமன்றி, ஏற்றுமதித் தொழில்களுக்கும் உள்நாட்டுச் சந்தையை வழங்குபவர்களுக்கும் நீண்டகாலப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. புதிய முதலீடுகளுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவது மட்டுமன்றி, ஏற்கனவே உள்ள நிறுவனங்களை வேறு இடத்திற்கு நகர்த்தவும் வழிசமைத்தது. மைக்ரோ, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தற்போதைய தவறான பொருளாதார நிர்வகிப்பால் ஏற்படும் விளைவுகளை பல தசாப்தங்களுக்கு அனுபவிக்க நேரிடலாம்.

## கடன் மறுசீரமைப்பின் அவசியம்

2020இல் ஏற்பட்ட 3.6 சதவீத பொருளாதார சரிவானது, வரவிருக்கும் விடயங்களின் அறிகுறி மட்டுமே. தெற்காசியாவில் (சர்வதேச ஒப்பீடுகளில் சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையில்) அதிகளவான வருமான சமத்துவமின்மையை இலங்கை கொண்டுள்ளதோடு, தொற்றுநோய் மற்றும் முடக்கல்நிலையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு குறைந்தளவான இழப்பீடுகளையே வழங்கியது. குறைந்த தசம புள்ளிகளால் வரையறுக்கப்பட்ட அதாவது, குறைந்த சமூக-பொருளாதார நிலையைக் கொண்ட எமது மக்களுக்கு மேலும் அதிக அதிர்ச்சிகளை தாங்கிக்கொள்ள முடியாது. எவ்வித பிரச்சினையும் இன்றி, இந்த நெருக்கடியில் இருந்து மீண்டெழ முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் ஈடுபாடுடனான கடன் மறுசீரமைப்பு திட்டத்தை உள்ளடக்கிய சிறந்த மீண்டெழும் திட்டத்தின் மூலம், குறிப்பாக பாதிப்பை எதிர்கொள்ளும் சமூகத்தின் சுமையை குறைக்கலாம். சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்பு இருந்திருந்தால், நாணய ஸ்திரத்தன்மையை அடைவதற்கான வாய்ப்பு அதிகம்.

கடந்த காலத்தில் இடம்பெற்றதைப் போன்று, சாத்தியமான முதல் சந்தர்ப்பத்திலேயே நாம் நிதி ஒழுக்கத்திற்கான கடமைகளை கைவிடக்கூடாது. இந்த சீர்திருத்தங்களை நாம் கடைப்பிடிக்க வேண்டும். காரணம், அவை எமது தீர்மானங்களாகும். இவ்வாறான விடயங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதை தடுக்கும் ஒரே வழியும் இதுவே.

கடினமான, ஆனால் அவசியமான சீர்திருத்தங்களுக்கு பொறுப்பாகிவிடுவோமோ என்ற அச்சத்தின் காரணமாக, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்ட கட்டமைப்பிற்குள் செயற்படுவதை அரசாங்கம் ஏற்க விரும்பாமல் இருக்கலாம். ஆகவேதான், எதிர்க்கட்சிகளுக்கு அர்த்தமுள்ள பங்கை வழங்கும் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான, பாராளுமன்றத்தின் அரசியலமைப்புப் பொறுப்பில் தொகுக்கப்பட்ட ஒரு பொதுவான குறைந்தபட்சத் திட்டத்திற்குப் பின்னால் நாம் செயற்பட வேண்டும். ஒருவர் மீது ஒருவர் பழிபோடும் முடிவற்ற இந்த செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை போடும்

வாய்ப்பும் இதில் உண்டு.  இந்த நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் லெபனானுக்கு ஏற்பட்டதைப் போன்ற முடிவு இலங்கைக்கும் ஏற்படும்.

## அவசியமான முன்நிபந்தனைகள்

**20ஆவது திருத்தச் சட்டத்தை மீளப்பெற வேண்டும்** - மீண்டெழும் பாதையில் நாம் செல்ல வேண்டுமாயின், குறைந்தபட்ச திட்டமொன்றை ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களுக்குள் செயற்படுத்த வேண்டும். தற்போதைய அரசியலமைப்பு, குறிப்பாக 20வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி அதிவிசேட அதிகாரங்களுக்கு உரித்துடையவராக ஆகியுள்ளார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுக்கிடையே அர்த்தமுள்ள ஒத்துழைப்பை பேண இது ஆரோக்கியமான விடயம் அல்ல. ஜனாதிபதி தனது அதிகாரத்தை மீறுவதற்கு எதிரான சிறந்த தற்காப்பு 19ஆவது திருத்தச் சட்டம் என்பதை 2018ஆம் ஆண்டில் காணக்கூடியதாக இருந்தது. ஆகவே, 19வது திருத்தச் சட்டத்தை நடைமுறைக்கு பொருத்தமான சில விடயங்களுடன் கொண்டுவருவது, நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து வெளியே கொண்டு வருவதற்கான ஒரு கூட்டு முயற்சிக்கான அடிப்படை முன்நிபந்தனையாகும்.

**சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்** - தனிநபர் விருப்பத்திற்கிணங்க ஆணைக்குழுக்களுக்கு வழங்கப்படும் நியமனங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். குறித்த நியமனங்களை அரசியலமைப்புப் பேரவையின் ஊடாக மெற்கொள்ள வேண்டும். சுதந்திரமாகவும் தொழில்சார் ரீதியாகவும் செயற்படும் மத்திய வங்கிக்கு முறையான நடைமுறைகளின் ஊடாக ஆளுநரை நியமிக்க வேண்டும்.

**மாகாண சபைகளை செயற்படுத்த வேண்டும்** - மாகாண சபைத் தேர்தல்கள் மிகவும் தாமதமாகிவிட்டன. அதனை பழைய சட்டத்தின் கீழ் உடனடியாக நடத்த வேண்டும். இதன்மூலம் மாகாண சபைகள் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதுடன், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் செயற்பாட்டில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்த வழிவகுக்கும்.

**குறைந்தபட்ச பொதுவான திட்டத்தை, குறைந்தது இரண்டு வருடங்களுக்குள் செயற்படுத்த வேண்டும்** - 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பின்னர் எந்த நேரத்திலும் ஜனாதிபதி தானாக பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை 20ஆவது திருத்தச் சட்டம் வழங்கியுள்ளது. 19ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் இதனை 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பின்னரே செய்திருக்க முடியும். தேர்தல் பிரச்சாரத்தை திசை திருப்பாமல் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் கவனம் செலுத்துவது அவசியமாகும். கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு மூலம் இரட்டைப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான அடித்தளத்தை கட்டியெழுப்ப குறைந்தபட்சம் இந்த கால அளவு அவசியம்.

**ஊடக ஒழுங்குவிதியை அறிமுகப்படுத்துதல்** - மின்காந்த அலைவரிசைகள்  மற்றும் தொடர்புடைய ஏனைய ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்தும் அனைத்து

நிறுவனங்களுக்கும் முறையான, சுயாதீனமான ஒழுங்குவிதி கட்டமைப்பை சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்துவது அவசியம். ஊடகப் பரப்பை ஜனநாயகப்படுத்துவதே இதன் நோக்கமாகும். தற்போதைய ஊடகச் சூழலில் மீண்டெழும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவற்கு அவசியமான பொது நம்பிக்கையை கட்டியெழுப்புவது கடினமாக இருக்கலாம். இது ஸ்பெக்ட்ரமின் (Spectrum) தற்போது உணரப்படாத மதிப்பை உணரவும் மற்றும் ஒதுக்கீட்டு செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கவும் உதவும். அலைவரிசைகளின் வெளிப்படைத்தன்மை கொண்ட ஏலங்கள், நாட்டிற்கு குறிப்பிடத்தக்க வருமானத்தை பெற்றுத்தரலாம். கட்சி சார்பற்று, சிறப்பாக மேற்கொள்ளப்படும் இந்த செயற்பாட்டின் பலன்கள், அரசியல் மற்றும் பொருளாதாரம் இரண்டையும் சாரும்.

### பொதுவான குறைந்தபட்ச செயற்திட்டத்தின் கூறுகள்

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், ஆர்வமுள்ள அனைத்து குழுவினராலும் ஒரு பொதுவான குறைந்தபட்ச செயற்திட்டம் கலந்துரையாடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். கீழ்காணும் பட்டியல் இறுதிப்படுத்தப்பட்டதல்ல. இது கலந்துரையாடலை ஆரம்பிப்பதை நோக்காகக் கொண்டது. இரட்டைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, மீட்புத் திட்டத்தில் நம்பிக்கையை வளர்க்கும் உடனடி மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகள் கீழே பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

#### உடனடி நடவடிக்கைகள்

1. **குறைந்த பட்சம் ஒரு வெள்ளை யானையின் சுமையில் இருந்தாவது எம்மை விடுவித்து கொள்ளல் -** பொருளாதார மீட்சியை அடைந்து கொள்வதற்கான பொது வேலைத்திட்டத்தின் மீதான உண்மையான அக்கறையை வெளிப்படுத்துமுகமாக தலையங்கங்கள் எழுதப்படும் வகையிலான ஒரு நடவடிக்கையை எடுப்பது மிகவும் முக்கியமானது. இதில் இந்தியன் ஏர்லைன்ஸை போன்று ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸை விற்றுவிடுவது ஒரு பொருத்தமான தெரிவாக இருக்கும் என தோன்றுகின்றது. 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட கணிப்பீடுகளின்படி ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் நாளாந்த சராசரி நட்டம் ரூபாய் 99 மில்லியன் ஆகும். இந்திய அரசாங்கம் ஏர் இந்தியா நிறுவனத்தினை முழுமையாக விற்றுவிட்டாலும் சேர்ந்திருந்த நட்டத்தின் ஒரு பகுதிக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டது போல இலங்கை அரசாங்கமும் சேர்ந்திருக்கும் நட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு பகுதிக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளும் அதேவேளை, நிறுவனத்தின் பொறுப்பை முழுமையாக வாங்குபவரிடம் விட்டுவிட வேண்டி ஏற்படலாம். இச்செயலானது வரவு செலவுத் திட்ட உரையில் சொல்லப்பட்ட அரசு நிறுவனங்களின் நட்டங்களை திறைசேரி தொடர்ந்தும் பொறுப்பேற்காது என்ற கூற்றினை மீள உறுதிப்படுத்துவதாக அமையும். இந்த விற்பனையானது திறைசேரியை (மற்றும் வரி செலுத்துவோரை) முடிவில்லாத அரச மானியம் வழங்களில் இருந்து பாதுகாக்கும். இதன் மூலம் நம்மை ஒருங்குபடுத்திக் கொள்வதில் நாம்

உண்மையான முனைப்புடன் இருக்கின்றோம் என்ற செய்தி, கடன் கொடுத்தோரை தெளிவாக சென்றடையும். ஸ்ரீலங்கன் நிறுவனத்தை விற்றுவிடுவதற்கான முன்மொழிவு அனைத்து நிறுவனங்களையும் தனியார்மயப்படுத்தலுக்கான அழைப்பு என்று பொருள் கொள்ளக் கூடாது. ஒவ்வொரு அரச நிறுவனத்திற்கும் பொருத்தமான சீர்திருத்தங்கள் வெவ்வேறு வடிவங்களை கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக வெறுமனே புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை விற்று விடுவதன் மூலமாக பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து சேவைகள் மேம்படாது. அரச நிதிகளின் கசிவு நிறுத்தப்படுவது முக்கியமான அதேவேளை அரச நிறுவனங்கள் என்பதற்குள் மட்டுப்படாது அனைத்து துறைவாரி சீர்திருத்தங்கள் வழியாக மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் எவ்வாறு மேம்படுத்தப்படலாம் என்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். தொலைத்தொடர்பு துறையில் செய்யப்பட்டது போல முறைசார் நெறிப்படுத்தல்களின் மூலமாக முடியுமான இடங்களில் போட்டியாளர்கள் அறிமுகப்படுத்தப்படுவதோடு தனியார்மயப்படுத்தப்படும் அரச நிறுவனங்களின் உள்ளக கலாச்சாரத்தை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் ஸ்ரீலங்கா டெலிகொம்-இல் செய்யப்பட்டது போல அரச தனியார் கூட்டு ஏற்படுத்தப்பட வேண்டி ஏற்படலாம்.

2. **பெற்றோலியப் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய சேவைகளுக்கு சூத்திர அடிப்படையிலான விலையை அறிமுகப்படுத்தல்** - சமையல் எரிவாயு உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய பொருட்களுக்கு சூத்திர அடிப்படையில் விலையை நிர்ணயிக்க வேண்டும். இரட்டைப் பற்றாக்குறை பிரச்சினையை தீர்ப்பதற்கு இது அவசியம். சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கச்சா எண்ணெய் இறக்குமதியானது இலங்கையின் மொத்த வர்த்தகப் பொருட்களின் இறக்குமதிச் செலவில் சுமார் 15 வீதமாகும். சர்வதேச சந்தை சக்திகளால் இந்த விலை நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது, அந்த சந்தை சக்திகளாலும் நாணய பெறுமதி குறைப்பாலும் தோற்றுவிக்கப்படும் அதிகரிப்புகள், இறுதி நுகர்வோர்மீது சுமத்தப்படாத பட்சத்தில், அது பொது நிதியூடாக ஈடுசெய்யப்பட வேண்டும், அதற்காக நிதிய இடைவெளியை விரிவாக்க வேண்டும். சூத்திர அடிப்படையிலான விலை நிர்ணயம், மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் உள்ளிட்ட பொருளாதாரத்தில் பிரதிபலிக்கும். இந்த சேவைகள் முறையான பொது பயன்பாட்டு ஒழுங்குமுறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அத்தோடு, செலவுகளை பிரதிபலிக்கும் பொருட்கள் வரியை அமைக்க வேண்டும். விலை மாற்றத்தால் அதிகமாக பாதிப்பை எதிர்கொள்ளும் வறிய மக்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மானியங்களை வழங்க வேண்டும்.
3. **திறன்வாய்ந்த மற்றும் நெகிழ்வுப் போக்குடைய சமூக பாதுகாப்பு வலையை நிறுவுவதை துரிதப்படுத்தல்** - நலன்புரி நன்மைகள் சபையின் கீழ் 40இற்கும் மேற்பட்ட நலத்திட்டங்களை ஒருங்கிணைத்து, பயனாளிகளின் தரவுத்தளத்தை உருவாக்குவதற்கு தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சியை துரிதமாக

நிறைவுசெய்ய வேண்டும். ரூபாயின் மீதான அழுத்தம் சில காலம் தொடரும் என்பதால், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயரும். ஆகவே உலக வங்கி நிதியுதவியின் கீழ் செயற்படுத்தப்படும் சமூக பாதுகாப்பு வலை திட்டத்தின் கீழ் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி இலக்கு மானியத் திட்டத்தை உருவாக்குவது அவசியம். சீர்திருத்தங்களின் போது ஏற்படும் பாதிப்பு, சமூக பாதுகாப்பு வலையமைப்பைச் செயற்படுத்துவதன் மூலம் குறைவடையும். இந்த ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக, சமுர்த்திக்கான மொத்த ஒதுக்கீட்டில் 25 சதவீதத்தை விழுங்கும் சமுர்த்தி திணைக்களத்தை மூட முடியுமாயின், நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் முயற்சியின் தீவிரத்தன்மையைப் பற்றிய ஒரு சக்திவாய்ந்த செய்தியை அது அனுப்பும்.

4. **சுதந்திரமாக செயற்படும் மத்திய வங்கியை உருவாக்குதல்** - தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு மத்திய வங்கியின் செயற்பாடுகள் பங்களித்துள்ளதென பல அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். தற்போது கருத்திற்கொள்ளப்படாத நாணய சட்ட மசோதாவை மீண்டும் செயற்படுத்துவது உள்ளிட்ட சீர்திருத்தங்கள் பற்றிய பரிந்துரைகளை மேற்கொள்ளும் ஒரு சிறப்புக் குழுவை உடனடியாக நியமித்து, விரைந்து செயற்படாவிட்டால் மீண்டும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புண்டு.
5. **அரச வருமானத்தை அதிகரித்தல்** - நாட்பட்ட நிதி பற்றாக்குறைக்கான நீண்ட கால தீர்வில் அரச வருமான அதிகரிப்பு கட்டாயமானது. நியாயத்தின் பெயரால் மறைமுக வரி (தற்போது மொத்தத்தில் 80 வீதம் வரை பங்களிக்கின்ற) சில வருடங்களுக்குள் 60 வீதம் வரை குறைக்கப்பட வேண்டும் என்பதோடு வருகின்ற குறை நேரடி வரியின் அதிகமான பங்களிப்பினால் இட்டு நிரப்பப்பட வேண்டும். இந்த விடயத்தில் ஏற்பட்டு வந்த முன்னேற்றங்கள் 2019ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வரி சலுகைகளால் பின்னோக்கி இழுக்கப்பட்டது என்பது உண்மை என்றாலும் தற்போது ஒட்டுமொத்த பொருளாதாரமும் வரி செலுத்துவோரும் நெருக்கடியில் இருப்பதன் காரணமாக நிலைமையை மீண்டும் பழைய நிலைக்கு உடனடியாக கொண்டுவருவது என்பது சாத்தியமில்லை. வரி சீர்திருத்தங்கள் கவனமாகவும் படிப்படியாகவும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளதோடு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) அதிகரிப்பு, உழைக்கும் பொழுது செலுத்தும் வரி (PAYE) மீளவும் கொண்டுவரப்படல் மற்றும் வருமான வரி தளத்தினை அகலமாக்குதல் போன்றவற்றின் மூலம் இந்நடவடிக்கையை ஆரம்பிக்கலாம். மிகைவருமான வரியோ அல்லது அது தவிர்ந்த வரிகளோ பின்னோக்கிய காலத்திற்காக அறவிடப்படுவது முறையாகாது.

6. **ஏற்றுமதி ஊக்குவிப்பு** - ஏற்றுமதி ஊக்குவிப்பு என்பது அதிக முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய விடயம். சில அரசியல்வாதிகள் நினைப்பதைப் போன்று இதனை புதிதாக ஆரம்பிக்கத் தேவையில்லை. காரணம், பரந்தளவில் கலந்தாலோசிக்கப்பட்ட தேசிய ஏற்றுமதி மூலோபாயம் உண்டு. தரவு மற்றும் பகுப்பாய்வின் அடிப்படையில், மின்னணுவியல், மென்பொருள் மற்றும் வர்த்தக

செயற்பாட்டு முகாமைத்துவம் உள்ளிட்ட ஆறு முன்னுரிமை பிரிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றை செயற்படுத்தவேண்டிய துறைசார் நிபுணத்துவம் கொண்ட குழுக்கள் சிலகாலமாக செயற்பட்டு வருகின்றன. புதிய முன்னுரிமை விடயங்கள் மற்றும் மூலோபாயங்களை உருவாக்க வேண்டிய அவசியம் இல்லையென கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் பிரபாஷ் சுபசிங்க சரியாக கூறியிருந்தார். அவர் குறிப்பிட்டதைப் போன்று தேசிய ஏற்றுமதி மூலோபாய செயன்முறையை தொடர வேண்டும். மீண்டும் மீண்டும் எழும் உரிமம் தொடர்பான விதிகள் (License raj) மற்றும் மாறிவரும் வங்கி விதிமுறைகள் உட்பட ஏற்றுமதியாளர்கள் அனுபவிக்கும் சிரமங்களை அடையாளம் காண்பதற்கு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுக்களுடன் தேசிய ஏற்றுமதி மூலோபாயக் குழுக்கள் ஒவ்வொன்றும் தொடர்ச்சியாக சந்தித்து கலந்துரையாட வேண்டும். குறித்த குழுக்கள் முன்வைக்கும் பரிந்துரைகளை அதிகாரம் கொண்ட அரசாங்கக் குழுக்கள் விரைந்து செயற்படுத்த வேண்டும்.

7. **சந்தை வசதியை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல் -** தொற்றுநோய்க்கு பின்னரான காலத்தில் சந்தைவாய்ப்பை பெற்றுக்கொள்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. காரணம், சகல பொருளாதாரங்களும் நெருக்கடியை சந்தித்துள்ளதோடு, பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளும் அதிகரித்து வருகின்றன. சில காலமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்த இந்தியா மற்றும் சீனாவுடனான இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளை நிறைவு செய்வது இதன் முதற்கட்டமாக இருக்கமுடியும். அவர்களின் தற்போதைய மற்றும் எதிர்கால பொருளாதார முக்கியத்துவம் காரணமாக அவற்றிற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். 2022ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைமுறைக்கு வந்த பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மையில் சேர்வதற்கான நிபந்தனைகளை உருவாக்குவது அடுத்த முன்னுரிமையாக இருக்க வேண்டும். இது ஏற்கனவே வியட்நாம் போன்ற போட்டியாளர்களுக்கு நன்மைகளை வழங்கி வருகின்றது. வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் கொள்கை ஸ்திரத்தன்மை மற்றும் சந்தை வாய்ப்பை உறுதி செய்ய முடியுமாயின், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

### இடைக்கால நடவடிக்கைகள்

1. **சக்திவள இறக்குமதியை குறைத்தல் -** மொத்த சரக்கு இறக்குமதி பட்டியலில் 15 சதவீதத்தை சுத்திகரிக்கப்பட்ட மற்றும் சுத்திகரிக்கப்படாத பெற்றோலிய பொருட்கள் கொண்டிருக்கின்றன. பொருளாதாரக் கொள்கையில் ஒருவரின் நிலைப்பாடு எதுவாக இருந்தாலும், இறக்குமதி செலவீனங்களைக் குறைப்பது நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்க உதவாது என்று வாதிடுவது கடினம். ஆனால் பெற்றோலிய பொருட்களைத் தவிர முதலீடு மற்றும் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதியைக் (மொத்த இறக்குமதியில் 80 சதவீதம்) குறைப்பது கடினம். இந்த இறக்குமதி குறைப்பை சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் விரும்புவர். இந்த இறக்குமதிகள் பெரும்பாலும் தற்போது நாட்டில்

பாவனையில் உள்ள ஏழு மில்லியனுக்கும் அதிகமான இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்காக நுகரப்படுகின்றன. நாட்டின் மழைவீழ்ச்சியின் அளவைப் பொறுத்து, மின்சாரம் தயாரிப்பதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியம் பயன்படுத்தப்படுன்றது. நாட்டில் தாராளமாகக் கிடைக்கும் நீர், காற்று மற்றும் சூரிய சக்தியில் அதிகளவில் தங்கியிருப்பதும், மின்சார முறையிலான போக்குவரத்திற்கு படிப்படியாக மாறுவதும் உயிரியல் ரீதியாக உருவாக்கப்பட்ட எரிபொருள் இறக்குமதியை குறைக்க வழிவகுக்கும். எனினும், பரிமாற்ற கட்டமைப்பை (transmission grid) நவீனமயப்படுத்தவும் அதனை தென்னிந்திய கட்டமைப்புடன் இணைப்பதற்கும் பாரிய முதலீடுகளை மேற்கொள்ளாமல் காற்று மற்றும் சூரிய ஒளி போன்ற இடைப்பட்ட மூலங்களின் பயன்பாட்டை கணிசமாக அதிகரிக்க முடியாது. இந்த மூலங்களின் இடைநிலை மற்றும் அடிக்கடி மாறும் தன்மைக்கு, அவற்றின் பங்களிப்பை மொத்த விநியோகத்தின் 15-25 சதவீத வரம்பில் வைத்திருப்பது அவசியம். இலங்கையின் சிறிய மின் கட்டமைப்பானது, உயர் மின்னழுத்த நேரடி மின்னோட்ட கேபிள் மூலம் ஒரு பெரிய கட்டமைப்புடன் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டால், உறிஞ்சக்கூடிய இடைப்பட்ட மூலங்களிலிருந்து கிடைக்கும் சக்திவளத்தின் அளவு மிக அதிகமாக இருக்கும். மின்சார பாவனையானது இலங்கையில் மாலை வேளையில் உச்சகட்டத்தில் உள்ளது. இது இந்தியாவிலிருந்து வேறுபடுகின்றது. இரு அமைப்புகளிலும் மாலை நேரங்களில் அதிக விநியோகம் செய்வதில் ஏற்படும் அதிக செலவுகளைக் குறைக்கவும் கூடுதல் மின் சுமையை குறைக்கவும் இது உதவும். மின் கட்டமைப்பின் நவீனமயமாக்கலுக்குத் தேவையான ஆய்வுகளை மேறகொள்ளவும் வளங்களை திரட்ட வேண்டியும் உள்ளதால், இரண்டு வருட காலத்திற்குள் பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாது. எவ்வாறாயினும், நடப்பு கணக்கு பற்றாக்குறையை குறைக்கவும், காலநிலை மாற்றத்தை திறனுள்ள வகையில் எதிர்கொள்ளவும், செயற்பாடுகளை இப்போதே ஆரம்பிக்க வேண்டும்.

2. **அரச பணியாளர்களின் தரத்தை மேம்படுத்தல்** - நிதிப்பற்றாக்குறையை குறைப்பதற்கும், பொதுமக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதற்கும், நிர்வாக சேவை மற்றும் ஏனைய அரச சேவைகளை மேம்படுத்தி தரப்படுத்துவது அவசியம். அரச இயந்திரத்தின் செயற்திறனை மேம்படுத்த வேண்டும். முறையற்ற ஆட்சேர்ப்புகளை உடனடியாக நிறுத்துவதே இதற்கான முன்நிபந்தனையாகும். அரசு, ஆயுதப் படைகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் உண்மையான பணியாளர் தேவைகள் கணக்கிடப்பட்டு, உபரி பணியாளர்களை (வேலைநேரம் குறைக்கப்பட்டவர்கள் மற்றும் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள்) மீண்டும் பணியிலமர்த்த வேண்டும். தக்கவைக்கப்பட்ட பணியாளர்களின் திறனை மேம்படுத்த அரசு பாரிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும். உற்பத்தி செயற்திறனை உறுதிப்படுத்துவதற்கு, அவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இதனை கணினிகள்

போன்ற தொட்டுணரக்கூடிய பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல், செயற்திறன் மிக்க பகுப்பாய்வுகள், தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் பயிற்சிக்குத் தேவையான வளங்களை வழங்குதல் போன்றவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் அதேவேளையில், அரச ஊழியர்களை அதிக உற்பத்தித்திறன் மிக்கவர்களாக மாற்றுவதற்கு செலவிடப்பட்ட வளங்களின் வீழ்ச்சி நிலைமையை, இலங்கை அரசாங்கம் தொடர்பில் நீண்டகாலமாக அவதானிப்பை மேற்கொள்ளும் பேராசிரியர் மிக் மூர் ஆவணப்படுத்தியுள்ளார். இந்த நிலை மாற்றமடைய வேண்டும்.

3. **தேசிய ஏற்றுமதி மூலோபாயம் பற்றிய ஆய்வு** - 2018-2022இற்கான தேசிய ஏற்றுமதி மூலோபாயமானது, சிறந்த ஏற்றுமதி திறன் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்களுடனான விரிவான ஆலோசனையுடன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அடையாளம் காணும் நேர்த்தியான முறைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. குறித்த மூலோபாயத்திற்கு வெளியே, சில அவதானிகள் கனிம மணல், காரீயம் போன்றவற்றின் சாத்தியக்கூறுகள் மீது அதிக கவனம் செலுத்தியுள்ளனர். (1930களில் பாரிய ஏற்றுமதி இடம்பெற்றது). எனவே, தொற்றுநோய் தொடர்பான மாற்றங்கள் மற்றும் குறிப்பாக மேலே குறிப்பிடப்பட்ட இயற்கை வளங்களின் சாத்தியக்கூறுகள் தொடர்பாக கவனம் செலுத்தி, தேசிய ஏற்றுமதி மூலோபாயத்தை மீளாய்வுக்கு உட்படுத்தி புதுப்பிப்பது பொருத்தமானதாக அமையும். (அவசியமான தொழிநுட்ப திறன்கள், மூலதனம் மற்றும் உள்ளூர் தொழிற்துறையின் ஒரு பகுதியாக இடம்பெறவேண்டிய மதிப்புச் சங்கிலிகள் உள்ளடங்களாக)
4. **நிலையான வரிக் கொள்கையொன்றை உருவாக்குதல்** - பரந்துபட்ட கலந்தாய்வின் மூலமாகவும் குறித்த வகுப்பினர்களுக்கு மட்டும் நன்மையளிக்கும் வகையில் சிறப்பாக ஏற்பாடுகளை உருவாக்கும் வழக்கத்தினை நிறுத்துவதன் வழியாகவும் ஒரு நிலையான, நீண்டகால வரிக் கொள்கையை உருவாக்க வேண்டும். தற்போது காலாவதியாகியுள்ள வரி சலுகைகளை வழங்குவதன் மூலமாக வெளிநாட்டு முதலீடுகளை கவரும் வழக்கம் மாற்றப்பட்டு, தற்போதைக்கு 136 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டடுள்ள பன்னாட்டு நிறுவனங்கள் மீது 15 சதவீத வரி அறவிடும் வகையிலான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான நிறுவனம் (OECD ) சார் ஒப்பந்தங்களை ஒட்டிய வகையில் முதலீட்டாளர்கள் வரவழைக்கப்பட வேண்டும்.